# அப்போஸ்தலனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷம்

**முன்னுரை:**

புதிய ஏற்பாட்டின் நிறைவான புத்தகமாக "வெளிப்படுத்தல்" புத்தகம் இருக்கிறது. புதிய ஏற்பாட்டின் தீர்க்க தரிசன புத்தகம் என்ற வகையில் இந்த "வெளிப்படுத்தல்" புத்தகம் மட்டுமே உள்ளது (வெளி 1:3). பழைய ஏற்பாட்டின் தீர்க்க தரிசன புத்தங்களாகிய தானியேல், எசேக்கியேல் மற்றும் சகரியா போன்றே புதிய ஏற்பாட்டில் உள்ள இந்த "வெளிப்படுத்தல்" புத்தகமும் குறிப்படையாள மொழிநடையில் எழுதப்பட்டது. இந்த குறிப்படையாள மொழியானது தேவனுடைய செய்தியை தேவனுடைய பிள்ளைகளுக்கு கொண்டு செல்வதோடு, தேவனுடைய எதிரிகள் இந்த செய்தியை புரிந்து கொள்வதை தடுக்கிறது.

**ஆசிரியர்:**

இந்த புத்தகத்தை எழுதியவர் அப்போஸ்தலனாகிய யோவான் (வெளி 1:1,4; 22:8). ஆனால் உண்மையில் யோவான் ஒரு கருவி மாத்திரமே. உண்மையில் இதன் ஆசிரியர் தேவனாய் இருக்கிறார். இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புவிக்கப்பட்ட இந்த வசனங்களை இயேசு தூதனை அனுப்பி தன்னுடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினார். (வெளி 1:1;22:16). இந்த புத்தகம் எழுதப்பட்ட போது தேவனுடைய வசனத்திற்காக பத்மு என்னும் தீவிலே யோவான் கைது செய்யப்பட்டிருந்தார் (வெளி 1:9). யோவான் இந்த புத்தகத்தை ஆசியாவில் இருக்கிற ஏழு சபைகளுக்கு எழுதியிருந்தார்(வெளி 1:11), என்றாலும் இந்த புத்தகம் நமக்காகவும்(எல்லா காலத்திலும் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்காகவும்) எழுதப்பட்டிருக்கிறது (வெளி 22:16; வெளி 1:3)

**எழுதப்பட்ட காலமும், இடமும்:**

இந்த புத்தகமானது கி.பி 94-96 -யில் எழுதப்பட்டிருக்கலாம். இந்த கால கட்டத்தில் ரோம இராஜ்யத்தின் ராஜாவாக டொமீஷியன் என்பவன் ஆளுகை செய்து கொண்டிருந்தான். இந்த மோசமான இராஜாவால் கிறிஸ்தவர்கள் மிகுந்த கஷ்டங்களை, உபத்திரவங்களை அனுபவித்து கொண்டு இருந்தனர். இப்படிப்பட்ட சூழ்நிலையில் கிறிஸ்தவர்களை பலப்படுத்தவும், தைரியப்படுத்தவும் மற்றும் ஆறுதல் படுத்தவமே எழுதப்பட்டது.

**மைய கருத்து மற்றும் நோக்கம் :**

டொமீஷீயன் கிறிஸ்தவர்களை மிகவும் மோசமாக உபத்திரவப்படுத்தினான்; அவர்களை கொலை செய்தான். கிறிஸ்தவர்கள் தங்களுடைய உறவுகளை, நண்பர்களையும் இழந்தனர் இப்படிபட்ட நேரத்தில் கிறிஸ்தவர்களை ஆறுதல் படுத்தி அவர்களை (கிறிஸ்தவர்களை) பலப்படுத்துவது இந்த புத்தகத்தின் நோக்கங்களில் ஒன்றாக இருக்கிறது. (வெளி 6:9-11; வெளி 7:13-17; வெளி 14:12,13; வெளி 17:14; வெளி 19:1-16).

புதிய ஏற்பாட்டில் "ஜெயம்" என்கிற வார்த்தை ஏறக்குறைய 28 முறை வருகிறது, அதிலும் "வெளிப்படுத்தல்" புத்தகத்தில் இந்த வார்த்தை அதிக முறை வருவதை நம்மால் பார்க்க முடிகிறது. பிசாசு அவனுடைய சேனைகளும் கிறிஸ்தவர்களாகிய நமக்கு விரோதமாய் போராடிக்கொண்டிருக்கிறார்கள், அவன் சோர்ந்து போவாதில்லை (வெளி 12:12), அவன்

சோதனைக்காரன் (மத் 4:3; 1 தெச 3:5), உபத்திரவப்படுத்துகிறவன் (வெளி 2:10); அவன் மோசம் போக்குகிறவன் (வெளி 12:9; 2 கொரி 2:11), அவன் ஆபத்தை கொண்டு வருபவனாக (வெளி 12:12,13), எப்பொழுதும் கிறிஸ்தவர்களோடு யுத்தம் பண்ணி கொண்டே இருக்கிறான். ஆனால் உண்மையில் இந்த யுத்தத்தில் கடைசியாக வெற்றிகொள்வது கிறிஸ்தவர்கள் தான். பிசாசு எவ்வளவு முயற்சி செய்தாலும், அவனால் வெற்றி கொள்ள முடியாது, கிறிஸ்தவர்களோடு கிறிஸ்து இருப்பதால் அவருடைய வசனத்தின் படி நடக்கிற அவர்கள் கிறிஸ்துவினால் அவனை(பிசாசையும், உலகத்தையும்,பாவத்தையும்,மரணத்தையும்) ஜெயம் கொள்கிறார்கள் என்பதே இந்த புத்தகத்தின் நோக்கமாக இருக்கிறது பார்க்கவும் (வெளி 17:14), ஜெயம் என்பதே இந்த புத்தகத்தின் மைய கருத்தாக இருக்கிறது.

**புறக்குறிப்பு:**

**அதிகாரம் ஒன்று:** அறிமுகம் ( 1அதி)

1. யோவானும், ஏழு சபைகளும் (1:1-11)
2. யோவான் இயேசுவின் மகிமையான தோற்றத்தை பார்த்தல் (1:12-20)

**அதிகாரம் இரண்டிலிருந்து மூன்று வரை:** ஏழு சபைக்கான செய்தி (2அதி -3அதி)

1. எபேசு சபைக்கான இயேசுவின் செய்தி (2:1-7)
2. சிமிர்னா சபைக்கான இயேசுவின் செய்தி (2 :8-11)
3. பெர்கமு சபைக்கான இயேசுவின் செய்தி (2:12-17)
4. தியத்தீரா சபைக்கான இயேசுவின் செய்தி (2:18-29)
5. சர்தை சபைக்கான இயேசுவின் செய்தி (3:1-6)
6. பிலதெல்பியா சபைக்கான இயேசுவின் செய்தி (3:7-13)
7. லவோதிக்கேயா சபைக்கான இயேசுவின் செய்தி (3:14-22)

**அதிகாரம் நான்கு:** தேவன் வானத்தில் சிங்காசனத்தில் இருப்பதை யோவான் பார்த்தல் (4 அதி)

1. சிங்காசனத்தில் வீற்றிருந்தவரின் தோற்றம் (4:1-4)
2. சிங்காசனத்தை சுற்றியிருந்தவர்கள்/இருந்தவைகள் பற்றி (4:5-8)
3. 24 மூப்பர்கள் சிங்காசனத்தில் வீற்றிருந்தவரை தொழுதுகொள்ளுதல் (4:9-11)

**அதிகாரம் ஐந்து:** ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருந்த புஸ்தகமும், ஆட்டுகுட்டியானவரும் (அதி 5)

1. யோவான் மிகவும் அழுதல் (5:1-5)
2. முத்திரைகளை உடைக்க ஆட்டுகுட்டியானவர் பாத்திரவனாய் இருக்கிறார் (5:6-10)
3. ஆட்டுகுட்டியானவரை, சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவரையும் மகிமைப்படுத்தல் (5:11-14)

**அதிகாரம் ஆறு முதல் எட்டு வரை:** ஆட்டுகுட்டியானவர் முத்திரைகளை உடைத்தல் (6அதி – 8அதி)

1. முதலாம் முத்திரை உடைக்கப்படும் போது (6:1-2)
2. இரண்டாம் முத்திரை உடைக்கப்படும் போது (6:3-4)

3. மூன்றாம் முத்திரை உடைக்கப்படும் போது (6:5-6)
4. நான்காம் முத்திரை உடைக்கப்படும் போது (6:7-8)
5. ஐந்தாம் முத்திரை உடைக்கப்படும் போது (6:9-11)
6. ஆறாம் முத்திரை உடைக்கப்படும் போது (6:12-17)
7. தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரை போடுதல் (7:1-8)
8. வெள்ளை அங்கிகளை தரித்து, கையில் குருத்தோலைகளை பிடித்திருந்தவர்களும் (7:9-17)
9. ஏழாம் முத்திரை உடைக்கப்படும் போது (7:1-5)

**அதிகாரம் எட்டு யிலிருந்து பதினொன்று வரை:** ஏழு எக்காளங்கள் (8:6 – 11 அதி)

1. முதலாம் எக்காளம் (8:6-7)
2. இரண்டாம் எக்காளம் (8:8-9)
3. மூன்றாம் எக்காளம் (8:10-11)
4. நான்காம் எக்காளம் (8:12-13)
5. ஐந்தாம் எக்காளம் (9:1-12)
6. ஆறாம் எக்காளம் (9:13-21)
7. யோவானிடம் புசிக்க கொடுக்கப்பட்ட சிறு புத்தகம் (10:1-11)
8. யோவானை தேவனுடைய ஆலயத்தை அளத்துபாரக்க கூறுதல் (11:1-2)
9. இரண்டு சாட்சிகள் (11:3-14)
10. ஏழாம் எக்காளம் (11:15-19)

**அதிகாரம் பன்னிரண்டியிலிருந்து பதினான்கு வரை :** சூரியனை அணிந்திருந்த ஸ்திரீ மற்றும் இரண்டு மிருகங்கள் மற்றும் சீயோன் மலையில் ஆட்டுகுட்டியானவரும், 1,44,000 பேரும் (12 அதி – 14 அதி)

1. சூரியனை அணிந்திருந்த ஸ்திரீ (12:1-17)
2. கடலிலிருந்து எழும்பி வந்த மிருகத்தின் தோற்றம்,விவரிப்பு (13:1-10)
3. ஆட்டுக்குட்டிக்கு ஒப்பான இரண்டாம் மிருகம் (13:11-18)
4. சீயோன் மலையில் ஆட்டுகுட்டியானவர் (14:1-3)
5. 1,44,000 பற்றி விவரிப்பு (14:4-5)
6. பாபிலோனின் வீழ்ச்சியும், தேவனுடைய பிள்ளைகளின் வெற்றியும் (14:6-14)
7. இரண்டு விதமான அறுவடைகள்(14:15-20)

**அதிகாரம் பதினைந்து மற்றும் பதினாறு:** ஏழு கலசங்கள் (15 அதி – 16 அதி)

1. ஏழு வாதைகளின் அறிமுகம் மற்றும் ஜெயம் பெற்ற பரிசுத்தவான்களின் காட்சி (15:1-8)
2. ஏழு கலசங்கள் ஊற்றப்படுதல் (16:1-21)

**அதிகாரம் பதினேழு மற்றும் பதினெட்டு:** மகா வேசியான பாபிலோனின் அழிவு (17அதி- 18அதி)

1. மகா வேசியின் தோற்றம் விவரிப்பு (17:1-6)

2. மிருகத்தின் தோற்றம் இரகசியத்தை சொல்லுதல் (17:7-18)
3. மகா வேசியின் அழிவு அறிவிக்கப்படுதல் (18:1-8)
4. மகா வேசியுடன், வேசித்தனம் பண்ணினவர்கள்,அந்த வேசியின் அழிவை கண்டு புலம்புதல் (18:9-19)
5. பாபிலோனின் அழிவு இறுதியானது (18:20-24)

**அதிகாரம் பத்தொன்பது:** ஆட்டுகுட்டியானவரின் கல்யாணம் (19 அதி)

1. வேசியின் அழிவு நிமித்தமாக தேவனை மகிமைப்படுத்தல் (19:1-6)
2. கிறிஸ்துவின் மனைவி விவரிப்பு (19:7-10)
3. மணவாளனைப் பற்றி விவரிப்பு (19:11-16)
4. மணவாளனின் வெற்றி (19:17-21)

**அதிகாரம் இருபது:** இறுதியான நியாயத்தீர்ப்பு (20:1-15)

1. ஆயிர வருட அரசாட்சி (20:1-9)
2. மிருகம், கள்ள தீர்க்கதரிசியும் அழிக்கப்படுதல் மற்றும் இறுதியான நியாயத்தீர்ப்பு (20:10-15)

**அதிகாரம் இருபத்தி மற்றும் இருபத்திரெண்டு:** பரலோகம், நித்திய பேரானந்தம் (21அதி -22அதி)

1. பரிசுத்த நமரமாகிய புதிய எருசலேம் (21:1-8)
2. புதிய எருசலேம் தோற்றம் (21:9-27)
3. சீக்கிரமாய் வருகிறேன், வசனங்கள் கைகொள்ளுங்கள் (22:1-17)
4. எச்சரிப்பு (22:18-19)
5. கர்த்தராகிய இயேசு சீக்கரம் வருகிறார் (22:18-21)